# அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே
# அன்னைத் தமிழ்முற்றப் போட்டி 2026

பேச்சு 2013 ஆம் ஆண்டு பிறந்த மாணவர்கள்

வளாகங்களில் முதல் மூன்று நிலைகளையும் அடைந்த மாணவர்கள் அன்னைத் தமிழ்முற்றப் போட்டியில் பங்குபெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

## உண்மையின் வலிமை

**இன்றைய உலகில் செய்திகளைப் பரப்புவதும், விமர்சனம் செய்வதும் யாருக்கும் எளிதானது. சிலர், அவர்கள் பார்க்காத விடயங்களைப் பார்த்தது போலவும், கேட்காத விடயங்களைக் கேட்டது போலவும் பேசுகின்றனர்.**

**நாம் அனைவரும் ஒரு முக்கிய விடயத்தை நினைவில் கொள்ள வேண்டும். "கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய்; தீர விசாரித்து அறிவதே மெய்."**

**சிலர் உண்மையைப் புறந்தள்ளி, கட்டுக்கதைகளை உருவாக்கி, பிறரின் மனதை வதைக்கும் வார்த்தைகளைப் பரப்புகின்றனர். இன்று, குறிப்பாக சமூக வலைத் தளங்களில், பொறுப்பு உணர்வு இல்லாமல் எதையும் பேசலாம் என்று சிலர் எண்ணுகின்றனர். இப்படியானவர்கள் பிறர் மனங்களைப் புண்படுத்தும் நோக்கம் கொண்டவர்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.**

**ஆனால் நண்பர்களே!**
**இதைக் கண்டு நாம் உடைந்து விடக்கூடாது. உண்மைகள் என்றும் உறங்குவதில்லை.** நாம் ஒருவருடன் ஒருவர் நல்ல வார்த்தைகளைப் பேச வேண்டும். கோபத்தில் கூட, வார்த்தைகளைக் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

”தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு”
என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. ஆகவே, பேசும் வார்த்தைகளில் நிதானம் வேண்டும்.

தவறான தகவல்கள் மற்றும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை பிரித்து அறியக் கற்றுக்கொள்ள வேண்டும். அன்றாட வாழ்வில் எம்மைத் தேடிவரும் தகவல்கள் சில, உண்மை போன்று தோற்றம் அளிக்கும். அதனால், தகவல்களின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ள எமது சிந்தனையைக் கூர்மைப்படுத்த வேண்டும்.

**நல்ல வார்த்தைகள், ஒருவரை மகிழ்விக்கவும் உயர்த்தவும் செய்யும். அதேவேளை, கெட்ட வார்த்தைகள் ஒருவரின் மனதை உடைக்க மட்டுமே செய்யும்.**

**எனவே! நாம் சொல்லிலும், செயலிலும் விழித்திருக்க வேண்டும்.**

**- நன்றி. வணக்கம்**

அனைத்து மாணவர்களுக்கும் இப்பிரதி வழங்கப்படுகிறது.
அனைத்து மாணவர்களையும் ஊக்கப்படுத்துவது ஆசிரியர் கடமை.
மாணவர்களை தயார்படுத்துவது பெற்றோரின் கடமை.